# அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

# அரையாண்டுத்தேர்வு

## 2024/2025

# தமிழ்

# ஆண்டு 8

நேரம்: 150 மணித்துளிகள்

நாள்: சனிக்கிழமை

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 16

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

**1** மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1. சமணம், பௌத்தம் ஆகிய வழிபாட்டு நெறிகள் பரவத்தொடங்கிய காலம்
   1. சங்கமருவியகாலம்
   2. சங்ககாலம்
   3. பல்லவர்காலம்
   4. சோழர்காலம்

2. சிறுவர்கள் பொங்கல் உண்டனர். இதில் பொங்கல் என்பது
   1. பொருளாகுபெயர்
   2. இடவாகுபெயர்
   3. காலவாகுபெயர்
   4. தொழிலாகுபெயர்

3. 50ஆவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
   1. வெள்ளிவிழா
   2. பவளவிழா
   3. வைரவிழா
   4. பொன்விழா

4. 34 ஆண்டுகள் வன்னியை ஆட்சி செய்த மன்னன்
   1. பண்டாரவன்னியன்
   2. கயிலாயவன்னியன்
   3. எல்லாளன்
   4. சங்கிலியன்

5. கின்று, கிறு என்பன
   1. எதிர்கால இடைநிலைகள்
   2. இறந்தகால இடைநிலைகள்
   3. இணைப்பிடைச் சொற்கள்
   4. நிகழ்கால இடைநிலைகள்

6. நூல் வெளியீட்டாளர் எழுதும் உரை
   1. பதிப்புரை
   2. முன்னுரை
   3. சிறப்புரை
   4. வெளியீட்டுரை

7. தோற்கருவிகளுள் மிருதங்கம் என அழைக்கப்படும் இசைக்கருவி
   1. மேளம்
   2. பறை
   3. முரசு
   4. தண்ணுமை

8. அரசி கூர்மதி உடையவள். இதில் கூர் என்பது
   1. பெயர்ச்சொல்
   2. உரிச்சொல்
   3. இடைநிலை
   4. உவமையுருபு

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

9. நேசக் கவிதை சொல்லும் பறவை. இதில் நேசம் என்பது
   1. சினம்
   2. எழில்
   3. அன்பு
   4. இன்பம்

10. தமிழர் அதிகமாக வாழும் நாடுகள்
   1. இந்தியா, மலேசியா
   2. இந்தியா, ஈழம்
   3. சிங்கப்பூர், ஈழம்
   4. இந்தியா, சிங்கப்பூர்

11. உலகம் அறிவியல் வளர்ச்சியை நோக்கி முன்னேறுகிறது. இதில் வந்துள்ள வேற்றுமை
   1. மூன்றாம் வேற்றுமை
   2. நான்காம் வேற்றுமை
   3. இரண்டாம் வேற்றுமை
   4. ஆறாம் வேற்றுமை

12. தேயிலைச் செடிகள் பச்சைப்பசேலெனக் காட்சியளித்தன. இதில் பச்சைப்பசேல் என்பது
   1. இரட்டைக்கிளவி
   2. இணைமொழி
   3. அடுக்குத்தொடர்
   4. அடுக்கிடுக்குத்தொடர்

13. காட்டு மல்லிகை என்ற கவிதையை எழுதிய ஈழத்துக் கவிஞர்
   1. சின்னத்தம்பிப்புலவர்
   2. கல்லடி வேலுப்பிள்ளை
   3. மகாகவி து. உருத்திரமூர்த்தி
   4. சோமசுந்தரப்புலவர்

14. கருமை + கூந்தல் என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. கருங்கூந்தல்
   2. கருமைகூந்தல்
   3. கரும்கூந்தல்
   4. கருமைக்கூந்தல்

15. பாடகனுக்குப் பாடகி போல நடிகனுக்கு
   1. நண்பி
   2. பாடகி
   3. நடிகை
   4. பாடினி

16. பிரித்தானியர் தெற்காசியா, கிழக்காசியா முழுவதையும் ஆளுகைக்குள் உட்படுத்திய நூற்றாண்டு
   1. 16ஆம் நூற்றாண்டு
   2. 19ஆம் நூற்றாண்டு
   3. 17ஆம் நூற்றாண்டு
   4. 18ஆம் நூற்றாண்டு

17. வேற்றுமை உருபுகளை ஏற்கும் சொல்
1. பெயர்ச்சொல்
2. இடைச்சொல்
3. வினைச்சொல்
4. உரிச்சொல்

18. மயில் அகவும் அதுபோல கிளி
1. கீச்சிடும்
2. கூவும்
3. பேசும்
4. அலறும்

19. தமிழகத்திலிருந்து ஈழத்திற்குக் கொண்டுவரப்பட்ட தமிழர் குடியேற்றப்பட்ட இடம்
1. திருகோணமலை
2. மலையகம்
3. அநுராதபுரம்
4. வவுனியா

20. உழவர் வயலை உழுதனர். இதில் உழுதனர் என்பது
1. பலர்பால் இறந்தகாலம்
2. ஆண்பால் இறந்தகாலம்
3. பலர்பால் நிகழ்காலம்
4. பலவின்பால் இறந்தகாலம்

21. உறக்கம் என்பதன் எதிர்ப்பொருட் சொல்
1. மறைவு
2. நிறைவு
3. விழிப்பு
4. தெளிவு

22. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
1. நல்வழி
2. திருக்குறள்
3. மூதுரை
4. அகநானூறு

23. பள்ளிவிழாவில் குமரனால் நாடகம்
1. நடித்தான்
2. நடிக்கிறான்
3. நடிக்கப்பட்டது
4. நடிப்பான்

24. சங்கமருவிய காலத்தைத் தொடர்ந்து வரும் காலம்
1. சோழர்காலம்
2. பல்லவர்காலம்
3. நாயக்கர்காலம்
4. சங்ககாலம

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

25. உணவு உண்ட குழந்தை உறங்கியது. இதில் வந்துள்ள பெயரெச்சம்
   1. உணவு
   2. குழந்தை
   3. உண்ட
   4. உறங்கியது

26. ஈழம் நீர்வளமும் நிலவளமும் நிறைந்தது. இதில் வந்துள்ள இடைச்சொல்
   1. அது
   2. உம்
   3. அன்
   4. தான்

27. குறுகிய கவிதைகளைக் கொண்ட வடிவம்
   1. காவியங்கள்
   2. வில்லுப்பாட்டு
   3. நாடகங்கள்
   4. குறும்பா

28. கரும்பு போல இனிக்கும் தமிழ். இதில் வந்துள்ள உவமையுருபு
   1. உம்
   2. போல
   3. தமிழ்
   4. கரும்பு

29. இசைக்கருவிகளின் வகைகள்
   1. ஆறு
   2. மூன்று
   3. இரண்டு
   4. நான்கு

30. பதினோராம் நூற்றாண்டில் தென்கிழக்காசியாவில் பரந்திருந்த ஆட்சி
   1. சோழர் ஆட்சி
   2. பல்லவர் ஆட்சி
   3. சேரர் ஆட்சி
   4. பாண்டியர் ஆட்சி

30x1 = 30 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.

1. இலக்கியங்கள்:

2. தமிழ்மொழி:

3. மழை:

4. புலவர்:

5. மலைகள்:

5 x2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தமிழிசையின் தொன்மைக்குச் சான்று ஒன்று எழுதுக.

2. பிரித்தானியர் தமிழர்களைப் பணிக்காகச் கொண்டு சென்ற நாடுகளுள் இரண்டு எழுதுக.

3. சங்கமருவிய காலம் அறநூல் காலம் என அழைக்கப்படுவதற்கான காரணம் என்ன?

4. மகாகவி து. உருத்திரமூர்த்தி எழுதிய பாடல் கூறும் மீனவவாழ்வின் துயரம் ஒன்று எழுதுக.

5. கவிஞர் கற்பனையோடு நடந்து சென்றார். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு, பொருள் என்பவற்றை எழுதுக.

   வேற்றுமை உருபு: ______

   பொருள்: ______

6. தாமரை கயல் அன்ன விழிகளுக்கு மை இட்டாள். இதில் வந்துள்ள உவமானம், உவமேயம் என்பவற்றை எழுதுக.

   உவமானம்: ______

   உவமேயம்: ______

7. கார் பொழிந்ததால் ஊர் மகிழ்ந்தது. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள ஆகுபெயர்களுள் ஒன்றினை எழுதுக.

5x2 = 10 புள்ளிகள்

## 4 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

உலகில் அறிவைப் பெறுதற்கே
உற்ற துணையாய் இருப்பதெல்லாம்
புலமை மிக்க சான்றோர்கள்
போற்றும் கல்வித் துறையேயாம்.

எழுதப் படிக்கத் தெரிந்தவன்தான்
எதையும் கற்றுக் கொண்டிடலாம்
பழுதில் லாமல் எண்ணுபவன்
பாரில் ஏமாந்தழ வேண்டாம்.

எண்ணத் தெரிந்தால் கணக்குவரும்
எழுதத் தெரிந்தால் படிப்புவரும்
எண்ணை எழுத்தை இகழாதே
ஏற்றுப் படிப்பாய் கண்ணேநீ.

- அழ. வள்ளியப்பா

1. உலகில் அறிவைப் பெறுவதற்கு உற்ற துணையாய் இருப்போர் யாவர்?

______________________________

2. எண்ணத் தெரிந்தால் வருவது என்ன?

______________________________

3. எவற்றை இகழக்கூடாது?

______________________________

4. படிப்பு வருவதற்கு எது தெரிய வேண்டும்?

______________________________

5. புலமை மிக்க சான்றோர் போற்றுவது எதனை?

______________________________

5 x2 = 10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள சொல்லியங்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

**தமிழ்:**

1. அம்மா அங்காடியில் பொருள்கள் வாங்கினார்.
2. காற்று வீசியதால் மரங்கள் முறிந்து விழுந்தன.
3. நிலவன் புல்லாங்குழல் வாசித்தான்.
4. நாம் இயற்கையைப் பேணவேண்டும்.
5. திருக்குறள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**வாழிடமொழி:**

1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

5x2 = 10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. வையகத் தமிழர்
2. தமிழிசை
3. நான் ஆசிரியரானால்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - விரும்பும் தொழில்
   - மகிழ்ச்சியுடன் கற்பித்தல்
   - நல்ல மாணவர்களை உருவாக்குதல்
4. வாழிடப்பள்ளியும் தமிழ்ப்பள்ளியும்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**
   - வாழிடநாட்டுப் பள்ளி
   - வாழிடநாட்டுக் கல்வி
   - தமிழ்ப்பள்ளி

15 புள்ளிகள்

# பகுதி 2
# வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

மாந்தவாழ்வில் வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வரும். இவற்றுள் தோல்வி என்ற தடையைத்தாண்டி நாம் வெற்றியடைய வேண்டுமானால், அதற்கு முயற்சி வேண்டும். முயற்சி உடையவர்கள் தங்களுடைய குறிக்கோளை நோக்கிய பாதையில் தொடர்ந்து செல்வார்கள். இதில் எந்தத் தடைகள் வந்தாலும் அதிலிருந்து பின்வாங்க மாட்டார்கள். மாந்தர் மட்டுமல்லாமல் உலகில் வாழும் ஏனைய உயிரினங்கள் கூட முயற்சியுடன் வாழ்கின்றன. எடுத்துக்காட்டாக தேனீக்கள் தேன் கூடு கட்டுவதையும் சிலந்தி வலை பின்னுவதையும் குருவிகள் கூடு கட்டுவதையும் கூறலாம். மனத்தில் இடம்பிடித்த திறவினையாளர்கள் கடின முயற்சியினால் வெற்றியடைந்தவர்களே! அவ்வகையில் தோமசுஅல்வா எடிசன் பல முறை தோல்விகளைச் சந்தித்து இறுதியில்தான் மின்குமிழைக் கண்டுபிடித்தார். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்பது பழமொழி. இதிலிருந்து முயற்சி இருந்தால் உலகம் நம்மை உயர்ந்த இடத்தில் வைத்து நோக்கும் என்பதை அறியலாம்.

1. குறிக்கோளை நோக்கிய பாதையில் தொடர்ந்து செல்பவர்கள் யாவர்?

______________________________

2. ஏனைய உயிரினங்களின் முயற்சிகளுள் இரண்டை எழுதுக.

______________________________

3. தனது முயற்சியால் மின்குமிழைக் கண்டுபிடித்தவர் யார்?

______________________________

4. முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார் என்ற பழமொழி மூலம் நாம் அறிவது என்ன?

______________________________

5. மாந்தவாழ்வில் மாறிமாறி வருபவை எவை?

______________________________

5 x2 = 10 புள்ளிகள்

**2. அறிவித்தலை வாசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளம் இடுக.**

## வெள்ளிவிழா அழைப்பிதழ்

எமது பெற்றோரின் 25ஆவது திருமணநாளை, மாலதி சிறுவர் இல்லக் குழந்தைகளுடன் இணைந்து கொண்டாட உள்ளோம். இவ்விழாவில் கலந்துகொண்டு எமது பெற்றோரை வாழ்த்துமாறு உற்றார் உறவினரை அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: மாலதி சிறுவர் இல்லம், முல்லைத்தீவு
காலம்: 16.02.2025ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை
பி.ப 14:00 மணி
தொடர்புகளுக்கு: பிள்ளைகள் - 0094 774455332

1. இது 75ஆவது திருமணநாள் விழாவுக்கான அழைப்பிதழ். (   )

2. இவ்விழா மாலதி சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (   )

3. சனிக்கிழமை இவ்விழா நடைபெறவுள்ளது. (   )

4. அழைப்பு விடுப்போர் உற்றார், உறவினர். (   )

5. விழா பி.ப 14:00 மணிக்கு நடைபெறவுள்ளது. (   )

5x1 = 5 புள்ளிகள்

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| **எழுதுதல்** | | | | |
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |
| **வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்** | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |